**<u>மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>**

**எம்.சி.ஓ.பி.எண்.927/2017 con.MCOP 928,932,933 and 930/2017**
**நாள்.13.02.2025**

2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ம் நாள் எதிர்மனுதாரர் தரப்பு **2ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | G.அருண்குமார் | தொழில் | |
| த.பெ/க.பெ. | கணபதி | சாதி | |
| கிராமம் | பாண்டிச்சேரி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 30 |

**<u>எ.சா.2</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பில் 2-ம் சாட்சி ஆவேன். நான் **எ.சா.2 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு, கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>ஆவணங்கள்</u>**

1. எ.த.சா.2 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 16 B 5565 என்ற பதிவு எண் கொண்ட ஆட்டோ வாகனத்திற்கு 2ஆம் எதிர்மனுதாரரான காப்பீட்டு நிறுவனம் வழங்கிய காப்பீட்டு சான்றிதழ் சான்றிட்ட உண்மை நகல்
2. எ.த.சா.3 18.07.2024ல் 1ஆம் எதிர்மனுதாரருக்கு 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் பதிவு தபால் மூலம் அனுப்பிய நோட்டீஸ் அலுவலக நகல், பதிவு தபால் ரசீது மற்றும் இணையதளத்திலிருந்து பெறப்பட்ட Track consignment

**<u>குறுக்கு விசாரணை</u>**

17.12.2017ல் விபத்து நடந்தது. அந்த சமயத்தில் நான் இந்த அலுவலக கிளையில் பணிபுரியவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 16 B 5565 எங்கள் அலுவலகத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. 1ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பிய பிறகு உங்கள் அலுவலகத்தில் நேரில்

வந்து ஆவணம் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. 18.07.2024ல் தான் 1ம் எதிர்மனுதாரருக்கு காலதாமதமாக நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது காலதாமதத்திற்கான காரணம் என்ன என்றால் தெரியாது. விபத்து நடந்த சமயத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனம் உங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் நீங்கள் உங்கள் நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).